# மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

**பொருள் எண்: 01**

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2025 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 02**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள, திருஅருட்பிரகாச தெய்வ நிலையத்தின் தைப்பூசம் பெருவிழா 10.02.2025 முதல் 13.02.2025 வரை நடைபெற்றது. அத்திருவிழவின் தூய்மைப்பணிமேற்கொள்ள அருகில் உள்ள நகராட்சிகளான பண்ணுருட்டி, நெல்லிக்குப்பம், விருத்தாச்சலம், திட்டக்குடி, சிதம்பரம் ஆகிய நகராட்சிகளிலிருந்து துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் பணிமேற்கொண்டனர். அவர்களுக்கு தங்குதல், உயவு அடிப்படை வசதிகள் வழங்கியமைக்கும் 4 நபர்களுக்கும் செலவினம் ரூ.1.50 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1580/2024/எச்1**

**பொருள் எண்: 03**

வடலூர் நகராட்சியில் வார்டு எண்.01 முதல் 27 வார்டுகளில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் 03.02.2025ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து விலைப்புள்ளி 05.02.2025ல் அறிவிப்பு தெரிவித்து 14.02.2025 மூன்று விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பன்றிகள் சீரமைப்பு பணி செய்பவர்களின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | விவேகம் பன்றிகள் சீரமைப்புத்திட்டம் , விழுப்புரம். | 150 |
| 2. | All India Speed pig catchers, Villupuram, | 200 |
| 3. | தமிழா பன்றிகள் சீரமைப்புத்திட்டம், விழுப்புரம், | 250 |

**அலுவலக குறிப்பு :-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதி பணி செய்ய பணி உத்தரவு வழங்கவும் செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 174/2025/எச்1.**

**பொருள் எண்: 04**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5ல் கோவிந்தசாமி நகரில் மாட்டு சந்தை நகராட்சி மூலம் திரு.சின்னராசு த/பெ திரு.ராமசாமி அவர்களின் காலியிடத்தில் மாத வாடகை அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது, அதற்கான தரைவாடகையாக மாதம் ரூ.8000/- வீதம் ஜுலை -2024 வரை திரு.சின்னராசு த/பெ திரு.ராமசாமி அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. ஆகஸ்டு 2024 முதல் மார்ச் 2025 வரை தரைவாடகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 03/2022/எ1.**

**பொருள் எண்: 05**

இந்நகராட்சியில் நடைபெறும் அரசு விழாக்கள், துறை சம்மந்தமான பொருள்கள் குறித்து மக்கள் செய்தி தொடர்பு துறை , கடலூர் மாவட்டம் அவர்களால் அனுமதி பெறப்பட்டு விளம்பரம் செய்யும் நாளிதழ்களுக்கு பட்டியல் தொகை வழங்க ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.430 /2025/சி1.**

**பொருள் எண்: 06**

வடலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் இயங்கி வந்த கடைகள் புதிய பேருந்து நிலையம் கட்டிடம் கட்டுவதற்காக இடிக்கப்பட்டது. மேற்படி இடிக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளின் குடிநீர் இணைப்பு 2023 ஆம் ஆண்டு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி துண்டிப்பு செய்யப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு கட்டணம் தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டுவருகிறது. எனவே மேற்படி கேட்பினை கணினியில் இருந்து நீக்கம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**கணினியில் நீக்கம் செய்யப்படவேண்டிய குடிநீர் இணைப்பு இனங்களின் விபரம் பின்வருமாறு**

| வ. எண் | வார்டு எண் | வரிவிதிப்பாளர் பெயர் | நீக்கம் செய்யவேண்டிய குடிநீர் இணைப்பு புதிய எண் | நீக்கம் செய்யவேண்டிய குடிநீர் இணைப்பு பழைய எண் | நீக்கம் செய்யவேண்டிய நிலுவை காலம் | | நீக்கம் செய்யப்பட வேண்டிய தொகை | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | முதல் | வரை | நிலுவை | நடப்பு | |
| 1 | 20 | சசிகுமார் | 182/020/900053 | 182/2135 | 2023–24–I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| 2 | 19 | ரா. ரமேஷ் | 182/019/900070 | 182/664 | 2023–24 I | 2024–25IV | 3600 | 3600 | 7200 |
| 3 | 19 | து. காஞ்சனா | 182/019/900049 | 182/3437 | 2023–24 I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| 4 | 19 | வி.எம்.சண்முகம் | 182/019/900050 | 182/3416 | 2023–24 I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| 5 | 19 | எம். கமலம் | 182/019/900032 | 182/3642 | 2023–24 I | 2024–25IV | 3600 | 3600 | 7200 |
| 6 | 19 | எஸ். பிரேமலதா | 182/019/900028 | 182/3140 | 2023–24 I | 2024–25IV | 3600 | 3600 | 7200 |
| 7 | 19 | சுப்ரமணியன் | 182/019/900044 | 182/3488 | 2023–24 I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| 8 | 19 | கே.ஆர்.கோபி | 182/019/900058 | 182/202 | 2023–24 I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| 9 | 19 | பி. சுப்புலட்சுமி | 182/019/900081 | 182/805 | 2023–24 I | 2024–25IV | 3600 | 3600 | 7200 |
| 10 | 19 | கே. இளவரசி | 182/019/900016 | 182/1963 | 2023–24 I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| 11 | 19 | பி. ரேணுகோபால் | 182/019/900025 | 182/2094 | 2023–24 I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| 12 | 19 | என்.எம்.அப்துல்லா | 182/019/900020 | 182/2204 | 2023–24 I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| 13 | 19 | பி. தங்கவேல் | 182/019/90001 | 182/1949 | 2023– | 2024 | 3600 | 3600 | 7200 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | 24 I | –25IV | | | |
| 14 | 19 | கே.சந்திரசேகரன் | 182/019/900024 | 182/2117 | 2023–24 I | 2024–25IV | 6000 | 6000 | 12000 |
| | | | | | | | | | **144000** |

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 413 /2025/அ1

**பொருள் எண்: 07**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.31917/2019/டிபி2, நாள்.13.02.2025–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுய சான்றளிப்பு வரையறைக்குட்படாத குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு ஒற்றைச் சாளர இணைய முகப்பில் (Single Window Portal ) கட்டட அனுமதி வழங்குவதற்கு ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ள அரசாணை (ப) எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி–1) துறை, நாள்.05.02.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31917/2019/டிபி2, நாள்.13.02.2025 மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :–** அரசாணை மற்றும் செயல்முறை ஆணை மன்றம் பதிவு செய்யலாம்.

(**ந.க.எண்**.400 /2025/எப்1)

**பொருள் எண்: 08**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 01 முதல் 27 வார்டுகளில் பிறப்பு மற்றும இறப்பு விவரங்களை பதிவு செய்யப்படும் படிவங்கள் மாதம் வாரியாக தனி தணியாக உள்ளதை (2024 முதல் ) பைண்டிங் செய்யவும், மற்றும் இதர படிவங்கள் பைண்டிங் செய்யுவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்தும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் தெரிவிக்கப்படும் அறிவிப்பினை உடன் பொதுமக்களக்கு தெரிவித்திட பேனர்கள் அடிப்பதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் ரூ.2.00 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்

(**ந.க.எண்**.03/2022/எ1)

**பொருள் எண்: 09**

வடலூர் நகராட்சியில் வார்டு எண்.19–ல் புதிய பேருந்து நிலைய கட்டிட கடைகளை முன் ஏலம் விடுவது தொடர்பானதாகும். பேருந்து நிலைய கடைகளை ஏலம் விடுவதற்கான கடைகளுக்கான வாடகை நிர்ணயம் செய்யவதற்காக நகராட்சி பொறியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் குறிப்பு கோரப்பட்டது. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பில் மேற்படி RCC கடைகளுக்கு ஏலம் விடுவதற்கு ஏதுவாக கட்டுமான மதிப்பு மற்றும் பொதுப்பணி துறை விலை விகிதத்தின்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விபரம்.

**Ground Floor – Restaurant 8.23 X 6.23m**

| | | | |
|---|---|---|---|
| 1 | Restaurant | **Restaurant** | |
| 2 | Type of Building. | RCC Structure | |
| 3 | Year of Construction | 2024 | |
| 4 | Age of the Building. | 0 | |
| 5 | Plinth Area of Building. | 8.69 | 6.69 |
| 6 | Plinth Area Rate ( 2024–2025) | **16950** Per Sq.M | |
| 7 | Land Value (2024–2025) | **1000.00** Per Sq.Feet | |
| 8 | Deprecation cost | 0 | |

| BUILDING COST | | | | |
|---|---|---|---|---|
| | Description | Length in M | Breath in M | Area in Sq.M |
| | Area of the Building | 8.69 | 6.69 | 58.14 |
| | | Area in Sq.M | Rate Per Sq.M | Building Cost |
| | Plinth Area Rate. | 58.14 | 16950 | 985406.90 |
| | 7.5% for Electrical works | | | 73905.52 |
| | 7.5% for Water supply works | | | 73905.52 |
| | 7.5% for Sanitary works | | | 73905.52 |
| | | | | 1207123.45 |
| | GST 18% | | | 217282.22 |
| | LWF 1% | | | 12071.23 |
| | | | Total Cost | 1436476.90 |
| | | Rate of Depriciation 1% 34 Years | Total Cost of Building | Amount |
| | Deprecation cost | 0 | 1436476.90 | 0.00 |
| | | | Net Value of Building | 1436476.90 |

| LAND COST | | | | | |
|---|---|---|---|---|---|
| | Building Area | 58.14 | Sq.M | 625.54 Sq.Feet | |
| | | | Total Land Area | 625.54 Sq.Feet | |
| | | Land Area per Sq.Feet | Government Land Cost per Sq.Feet | | Total Land Cost |
| | Land Cost | 625.54 | 1000.00 | | 625544.44 |

| TOTAL COST | | | | | |
|---|---|---|---|---|---|
| | Building Cost | 1436476.90 | | | |
| | Land Cost | 625544.44 | | | |
| | Total Cost | 2062021.34 | | | |
| | Monthly Rent for Shop | 2062021.34 /12x16/100 | 27493.62 | Say | 27500.00 |

**Ground Floor – Shop 3.00 X 4.00m**

| | | | |
|---|---|---|---|
| 1 | Shop No | 1 to 50 | |
| 2 | Type of Building. | RCC Structure | |
| 3 | Year of Construction | 2024 | |
| 4 | Age of the Building. | 0 | |
| 5 | Plinth Area of Building. | 3.46 | 4.46 |
| 6 | Plinth Area Rate ( 2024-2025) | 16950 Per Sq.M | |
| 7 | Land Value (2024-2025) | 1000.00 Per Sq.Feet | |
| 8 | Deprecation cost | 0 | |

| BUILDING COST | | | | |
|---|---|---|---|---|
| | Description | Length in M | Breath in M | Area in Sq.M |
| | Area of the Building | 3.46 | 4.46 | 15.43 |
| | | Area in Sq.M | Rate Per Sq.M | Building Cost |
| | Plinth Area Rate. | 15.43 | 16950 | 261565.62 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 7.5% for Electrical works | | | 19617.42 |
| | 7.5% for Water supply works | | | 19617.42 |
| | 7.5% for Sanitary works | | | 19617.42 |
| | | | | 320417.88 |
| | GST 18% | | | 57675.22 |
| | LWF 1% | | | 3204.18 |
| | | | **Total Cost** | **381297.28** |
| | | **Rate of Depriciation 1% 34 Years** | **Total Cost of Building** | **Amount** |
| | Deprecation cost | 0 | 381297.28 | 0.00 |
| | | | **Net Value of Building** | **381297.28** |

**LAND COST**

| | | | | |
|---|---|---|---|---|
| | Building Area | 15.43 | Sq.M | 166.04 Sq.Feet |
| | | | **Total Land Area** | **166.04 Sq.Feet** |
| | | **Land Area per Sq.Feet** | **Government Land Cost per Sq.Feet** | **Total Land Cost** |
| | Land Cost | 166.04 | 1000.00 | **166044.02** |

**TOTAL COST**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Building Cost | 381297.28 | | | |
| | Land Cost | 166044.02 | | | |
| | **Total Cost** | **547341.30** | | | |
| | **Monthly Rent for Shop** | 547341.30 /12x16/100 | **7297.88** | **Say** | **7300.00** |

**First floor – Shop 3.00 X 4.00m**

| | | | |
|---|---|---|---|
| 1 | Shop No | **1 to 50** | |
| 2 | Type of Building. | RCC Structure | |
| 3 | Year of Construction | **2024** | |
| 4 | Age of the Building. | 0 | |
| 5 | Plinth Area of Building. | **3.46** | **4.46** |
| 6 | Plinth Area Rate ( 2022-2023)<br>**Class E2 RCC framed Strucrure** | **15042.5** Per Sq.M | |
| 7 | Land Value (2024-2025) | **1000.00** Per Sq.Feet | |
| 8 | Deprecation cost | 0 | |

**BUILDING COST**

| | | | | |
|---|---|---|---|---|
| | **Description** | **Length in M** | **Breath in M** | **Area in Sq.M** |
| | Area of the Building | 3.46 | 4.46 | 15.43 |
| | | **Area in Sq.M** | **Rate Per Sq.M** | **Building Cost** |
| | Plinth Area Rate. | 15.43 | 15042.5 | 232129.84 |
| | 7.5% for Electrical works | | | 17409.74 |
| | 7.5% for Water supply works | | | 17409.74 |
| | 7.5% for Sanitary works | | | 17409.74 |
| | | | | 284359.06 |
| | GST 18% | | | 51184.63 |

| | | | | |
|---|---|---|---|---|
| | LWF 1% | | | 2843.59 |
| | | | Total Cost | 338387.28 |
| | | Rate of Depriciation 1% 34 Years | Total Cost of Building | Amount |
| | Deprecation cost | 0 | 338387.28 | 0.00 |
| | | | Net Value of Building | 338387.28 |

**LAND COST**

| | | | | |
|---|---|---|---|---|
| | Building Area | 15.43 | Sq.M | 166.04 Sq.Feet |
| | | | Total Land Area | 166.04 Sq.Feet |
| | | Land Area per Sq.Feet | Government Land Cost per Sq.Feet | Total Land Cost |
| | Land Cost | 166.04 | 1000.00 | 166044.02 |

**TOTAL COST**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Building Cost | 338387.28 | | | |
| | Land Cost | 166044.02 | | | |
| | **Total Cost** | **504431.29** | | | |
| | **Monthly Rent for Shop** | 504431.29 /12x16/100 | 6725.75 | Say | 6730.00 |

- 625.54 சதுரடி உள்ள (RCC) Restaurant கடை 1, சதுரடிக்கு ரூ.44/-
- 166.04 சதுரடி உள்ள (RCC) தரை தளம் 50 கடைகளுக்கு 1 சதுரடிக்கு ரூ.44/-
- 166.04 சதுரடி உள்ள (RCC) முதல் தளம் 60 கடைகளுக்கு 1 சதுரடிக்கு ரூ.41/- வீதம் வாடகை நிர்ணயம் செய்திடலாம் என பரிந்துரைத்துள்ளார்.

**இந்நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பில் கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பித்துள்ளார்**

வடக்கு குறுக்கு ரோட்டில் உள்ள தனியார் கடைகளின் வாகையினை ஆய்வு செய்ததில் கீழ்காணும் விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

| வ. எண் | ஆய்வு செய்த கடையின் பெயர் | அளவு | தற்போதைய வாடகை மதிப்பு | வாடகை மதிப்பின் படியான சதுர அடி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1. | அரிசி மண்டி கடை (தரை தளம் மற்றும் முதல் தளம்) | 600 | 25000/- | 42 |
| 2. | அரிசி மண்டி கடை (தரை தளம்) | 600 | 1500/- | 25 |
| 3. | பேக்கரி | 384 | 20000/- | 52 |
| 4. | மொபைல்ஸ் | 320 | 20000/- | 63 |

**இந்நகராட்சி பொறியாளர் மற்றும் வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படி வாடகை ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு**

| வ. எண். | கடைகளின் விவரம் மற்றும் அளவு | நகராட்சி பொறியாளர் பரிந்துரையின்படி நிர்ணயம் செய்யப்படக்கூடிய வாடகை விவரம் சதுர அடிக்கு ரூ. | நகராட்சி வருவாய் ஆய்வர் குறிப்பின்படி தனியார் கடைகளின் வாடகை விவரம் சதுர அடிக்கு ரூ. |
|---|---|---|---|
| 1. | 625.54 சதுரடி உள்ள (RCC) Restaurant கடை 1, சதுரடிக்கு | 44/- | 63/- |
| 2. | 166.04 சதுரடி உள்ள (RCC) தரை தளம் 50 கடைகளுக்கு 1 சதுரடிக்கு | 44/- | 52/- |
| 3. | 166.04 சதுரடி உள்ள (RCC) முதல் தளம் 60 கடைகளுக்கு 1 சதுரடிக்கு | 41/- | 42/- |

மேற்கண்ட பட்டியலில் நகராட்சி பொறியாளரால் கட்டுமான மதிப்பு மற்றும் பொதுப்பணித்துறை விலை விகிதத்தின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை , நகராட்சி தற்போதைய கடைகளுக்கான வாடகை மற்றும் தனியார் கடைகளுக்கான வாடகை மற்றும் வருவாய் ஆய்வர் அவர்களின் பரிந்துரைக்கப்பட்டுள்ள வாடகை இதன் அடிப்படையில் தற்போது கட்டுமான பணிகள் நடைபெற்றுவரும் புதிய பேருந்து நிலையம் கடை வாடகையினை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம். மேலும், நகராட்சி பங்குத்தொகையினை ஈடு செய்வதற்காக மேற்குறிப்பிடப்பட்ட கடைகளின் ஏலம் விடுவதற்காக வைப்புத்தொகையினை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

| வ. எண் | கடை விவரம் | மொத்த கடை | அளவு | நகராட்சி வருவாய் ஆய்வர் பரிந்துரையின்படி நிர்ணயம் செய்யப்படக்கூடிய கடைகளின் வாடகை ரூ. | கடை ஒன்றுக்கு செலுத்த வேண்டிய டேவணித் தொகை (கேட்பு வரைவோலையாக (DD)மட்டும்) |
|---|---|---|---|---|---|
| 1. | உணவகம் (Restaurant) | 1 | 625.54 சதுரடி | 27,500/- | 15,00,000/- |
| 2. | பேருந்து நிலையம் வெளிபுற கடைகள் கீழ்தளம் (பண்ருட்டி மெயின் ரோடு) | 14 | 166.04 சதுரடி | 9,000/- | 9,00,000/- |
| 3. | பேருந்து நிலையம் வெளிபுற கடைகள் மேல் தளம் (பண்ருட்டி மெயின் ரோடு) | 16 | 166.04 சதுரடி | 7,500/- | 8,00,000/- |
| 4. | பேருந்து நிலையம் உட்புற கடைகள் கீழ் தளம் | 36 | 166.04 சதுரடி | 7,600/- | 7,50,000/- |
| 5. | பேருந்து நிலையம் உட்புற மேல்தள கடைகள் | 44 | 166.04 சதுரடி | 6,730/- | 7,00,000/- |

மேற்கண்டவாறு சதுர அடிக்கான வாடகை , வைப்புத்தொகை நிர்ணயம் செய்து ஏலம் விடும் பட்சத்தில் , புதிய பேருந்து நிலையம் கடையின் கட்டுமான செலவில் நகராட்சி பங்குத்தொகையினை ஈடுசெய்திட இயலும் என்பதினால் இவ்வாடகை தொகையினை மன்றம் ஒப்புதல் பெற்று ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 170/2025/அ1**

**பொருள் எண்: 10**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டு பகுதியில் சேகரமாகின்ற குப்பைகளை தரம் பிரத்து குப்பைகளை மக்கும் குப்பையை MCC ல் உரமாக்கும் பணியாகும், மக்காத குப்பைகளை பிளாஸ்டிக் கழிவுகளை எதற்கும் உபயோகிக்க முடியாதவற்றை சிமெண்ட் பேக்டரிக்கு அனுப்பப்பட வேண்டி உள்ளது. எனவே, இந்நகராட்சியிலிருந்து பெரிய லாரி மூலமாக அனுப்ப வாகனம் வாடகை அடிப்படையில் அரியலூர் (டால்மியா சிமெண்ட் பேக்டரி), மற்றும் அல்ட்ரா டெக் சிமெண்ட் பேக்டரி அனுப்ப ஒரு டிரிப்டக்கு ரூ. 12000/-செலவினம் ஏற்படும் என தெரிய வருகின்றது. எனவே, சேகராமாகின்ற பிளாஸ்டிக் கழிவுகளை அவ்வப்பொழுது அனுப்ப ஆகும் தோராய செலவினம் ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1. பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
2. குப்பை வரியிலிருந்து பெறப்படும் சேவை கட்டணத்திலிருந்து செலவுசெய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.384/2025/எச்1**

**பொருள் எண்: 11**

இந்நகராட்சியில் 27 வார்டுகளில் 11,872 வீடுகளில் தினசரி குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. அதில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து அதனை பூசாலிக்குப்பம் மற்றும் பாட்டை தெரு நுண்ணுயிர் உரக்கிடங்கில் குப்பைகளை உரமாக்குவதற்கும் பயன்பாட்டில் உள்ளது. அதில் கீழ்க்கண்டவாறு பணி செய்ய

1. 2எண்ணிக்கையிலான MCC மையம் உள்ளது. தினசரி குப்பைகளை அரைக்கவும் மூன்று நாட்களுக்கு ஒரு முறை குப்பைகளை பிரட்டி போடவும் 8 நபர்கள் தேவை.
2. மக்காத கழிவுகள் பிளாஸ்டிக் தினசரி சுமார் 1.5 டன் வருகிறது. பெயிலிங் செய்வதற்கு மற்றும் சிமெண்ட் ஃபேக்டரிக்கு லாரியில்லோடு ஏற்றுவதற்கு 2 நபர்கள் தேவை. ஆக மொத்தம் 10 நபர்கள் தேவை

மேற்கண்ட பணிகள் தொய்வின்றி நடைபெற வேண்டியுள்ளது. மேலும் நமது நகராட்சியின் உரக்கிடங்கு பேணிக்காக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் பசுமை தீர்ப்பாயம், சென்னை தெற்கு பிராந்தியம் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் உரக்கிடங்கு பேணிக்காக்கப்பட வேண்டியுள்ளது.

மேலும் இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களின் தினசரி ஊதிய அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும், இப்பணிக்கு விலை புள்ளி கோரவும் உத்தேச மதிப்பீடு ரூபாய் 5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 384/2025/எச்1**

**பொருள் எண்: 12**

வடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை நகரங்களுக்கான விழிப்புணர்வு மற்றும் போனர் ஆகிய வாங்க நகர் மன்ற தீர்மானம் எண். 502, நாள். 03.02.2025 தேதி அனுமதி வழங்கப்பட்டது. கடந்த 24.02.2025 தேதி விலைப்புள்ளி கோரியதில் அதன் பேரில் முன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீம் |
|---|---|---|
| 1 | சூரியாபிரிண்டர்ஸ் | (–) 0.6 குறைவு % |
| 2 | லட்சுமி பிரிண்டர்ஸ் | (+)1.1 அதிகம் % |
| 3 | கிருஷ்ணா பிரிண்டர்ஸ் | +1.24 அதிகம் % |

**அலுவலக குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப் பெற்ற முன்று விலைப்புள்ளிகள் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள. சூரியா பிரிண்டர்ஸ் ஒப்பந்தார் வடலூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று நகர மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 681/2025/எச்1**

**பொருள் எண்: 13**

வடலூர் நகராட்சியில் நுண் உயிர் உரங்கிடங்கில், சிறிய பழுதுகள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொள்ள நகர் மன்ற தீர்மானம் எண்:488, நாள்.03.02.2025 தேதி அனுமதி வழங்கப்பட்டது. கடந்த 24.02.2025தேதி விலைப்புள்ளி கோரியதில் அதன் பேரில் முன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | G. சுப்புரமணியன் | (−)28.29% |
| 2 | DEVI CONSTRUCTIONS | (−) 24.26% |
| 3 | A. ஸ்டாலின் | (−)19.81% |

**அலுவலக குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப் பெற்ற முன்று விலைப்புள்ளிகள் மதிப்பீ டை விட குறைவாக கொடுத்துள்ள**G.சுப்பிரமணியன் அரசு ஒப்பந்ததாரர் குறிஞ்சிப்பாடி, வடலூர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றும் நகர மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 691/2025/எச்1**

**பொருள் எண்: 14**

வடலூர் நகராட்சி ஒரு மின்னாளர் மற்றும் ஒரு மின் கம்பி உதவியாளர் 6மாத காலத்திற்கு வெளிகொணர்வு முகமை மூலம் அமர்த்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, பணிகாலம் முடிவுறும் நிலையில் உள்ளதால் மார்ச் மாதத்திற்கான ஊதியம் வழங்க ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.542, நாள்.19.08.2024 ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து நிர்வாக நலன் கருதி அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் மூலமாகவே அதே விலை விகிதத்தில் மேலும், ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மேற்படி, பணியில் மதிப்பீட்டு தொகையை விட கூடுதல் செலவினம் ரூ.45000/- செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.874/2024/இ1.**

**பொருள் எண்: 15**

வடலூர் நகராட்சி 27 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் நேரடி நீருந்து நிலையங்களில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை வெளிகொணர்வு முகமை பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, பணிகாலம் முடிவுறும் நிலையில் உள்ளதால் மார்ச் மாதத்திற்கான ஊதியம் வழங்க ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.562, நாள்.19.08.2024ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து நிர்வாக நலன் கருதி அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் மூலமாகவே அதே விலை விகிதத்தில் மேலும், ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மேற்படி, பணியில் மதிப்பீட்டு தொகையை விட கூடுதல் செலவினம் ரூ.2.30 இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.552/2024/இ1.**

**பொருள் எண்: 16**

வடலூர் நகராட்சி வார்டு எண்.01 முதல் 27 வார்டுகளில் உள்ள 27 மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் 49 ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மோட்டார்களில் அடிக்கடி ஏற்படும் Fuse, நகராட்சிக்கு சொந்தமான ஜெனரேட்டர்கள் கையாளவும் மற்றும் அலுவலகம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகம் போன்ற இடங்களில் மின் இயக்க பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் மின்னாளர் நிலை II பணி காலியாக இருப்பதாலும், குடிநீர் பணியின் அவசியம் கருதியும் ஒரு மின்னாளர் மற்றும் ஒரு மின் கம்பி உதவியாளர் 6மாத காலத்திற்கு வெளிகொணர்வு முகமை மூலம் அமர்த்தும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.417/2025/இ1.**

**பொருள் எண்: 17**

வடலூர் நகராட்சி முழுவதும் தினசரி 3.55 MLD குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. இந்நகராட்சியில் குடிநீர் வழங்கல் மற்றும் விநியோக பணிக்காக நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தால் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய அரசின் நெறிமுறைகளின்படி வெளிக்கொணர்வு முகமை பராமரிப்பு பணியாளர்களை கணக்கீடு செய்தும் மேலும், பணியாளர்களுக்கான தினசரி ஊதியத்தினை PWD SOR அல்லது மாவட்ட ஆட்சியர் விலைப்பட்டியல் விகிதத்தில் நிர்ணயித்து வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 சுற்றறிக்கையின்படி நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.அரசின் நெறிமுறை மற்றும் அளவுகோலின்படி 27 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் நேரடி நீருந்து நிலையங்களில் இயக்குதல் பணிகளை வெளிகொணர்வு முகமை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.70 இலட்சத்திற்கும் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண். 552/2025/இ1**

**பொருள் எண்: 18**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள சாலைகளை முழுமையாக ஆய்வு செய்து சாலைப்பதிவேடு மற்றும் நகராட்சி கணக்கில் உரிய பதிவுகள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட சாலைகளை ஆய்வு செய்ததில் மொத்தம் உள்ள 698 சாலைகளில் 659 சாலைகள் மட்டுமே சாலைப் பதிவேட்டிலும் நகராட்சி கணக்கிலும் இருந்து வருகிறது. மீதம் கீழ்காணும் விபரப்படி உள்ள 39 சாலைகளை நகராட்சி கணக்கு மற்றும் சாலை பதிவேட்டில் பதிவு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | சாலையின்பெயர் | Category | நீளம் மீ. | அகலம் மீ. | சாலையின் தன்மை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | ராமமூர்த்தி ரெட்டியார் நகர் –1வது கிராஸ் | Road | 75.00 | 4.00 | மண்சாலை |
| 2 | | ராமமூர்த்தி ரெட்டியார் நகர் –7வது கிராஸ் | Road | 145.00 | 6.00 | மண்சாலை |
| 3 | | ராமமூர்த்தி ரெட்டியார் நகர் –8வது கிராஸ் | Road | 89.00 | 6.00 | மண்சாலை |
| 4 | | பாரதிதாசன் நகர் 11வது சாலை | Lane | 200.00 | 3.50 | மண்சாலை |
| 5 | 2 | சேரன் நகர் மெயின் ரோடு | Road | 350.00 | 6.00 | தார் சாலை |
| 6 | 3 | சின்ன காலனி – கஞ்சமநாதபுரம் காலனிவரை | Lane | 250.00 | 3.50 | மண்சாலை |
| 7 | 4 | பக்த நகர்–1வது (விரிவாக்கம் )தெரு | Road | 100.00 | 5.00 | மண்சாலை |
| 8 | | விஸ்வகர்மா நகர் 11வது சாலை | Road | 250.00 | 6.00 | தார்சாலை |
| 9 | 5 | கோவிந்தசாமி நகர் ஆ்ஃப்சைட் ரோடு | Road | 150.00 | 5.00 | மண்சாலை |
| 10 | | கோவிந்தசாமி நகர் 12வது தெரு | Street | 110.00 | 4.00 | மண்சாலை |
| 11 | 6 | நேரு தெரு–1வது தெரு | Street | 80.00 | 3.20 | மண்சாலை |
| 12 | 8 | முத்துகிருஷ்ணன் சாலை விரிவாக்கம் | Road | 150.00 | 5.00 | மண்சாலை |
| 13 | 9 | அண்ணா நகர் 5வது தெரு | Road | 80.00 | 5.00 | மண்சாலை |
| 14 | | அண்ணா நகர் 6வது தெரு | Road | 70.00 | 5.00 | மண்சாலை |
| 15 | | சேஷாயநகர் எக்ஸ் ரோடு | Road | 250.00 | 5.00 | மண்சாலை |
| 16 | 10 | MMK நகர் முதல் தங்கராசு நகர் சாலை வரை இணைப்பு சாலை | Street | 300.00 | 4.00 | மண்சாலை |
| 17 | 12 | வாகிசம் நகர் பூங்கா சாலை | Street | 100.00 | 6.00 | மண்சாலை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18 | | வாகிசம் நகர் ரைஸ் மில் பின்புறம் சாலை | Lane | 50.00 | 3.20 | மண்சாலை |
| 19 | 13 | அருள்ஜோதி நகர் –14வது சாலை | Street | 80.00 | 6.00 | மண்சாலை |
| 20 | 14 | வள்ளலார் நகர் 1வது விரிவாக்கம் | Street | 480.00 | 5.00 | மண்சாலை |
| 21 | | பாரதி தெரு | Road | 90.00 | 5.00 | மண்சாலை |
| 22 | | ஜோதிநகர் –20வது சாலை | Road | 95.00 | 5.00 | மண்சாலை |
| 23 | | சாந்தி நகர் விரிவாக்கம் | Street | 40.00 | 5.00 | மண்சாலை |
| 24 | 15 | இந்திரா நகர் –12வது சாலை | Street | 150.00 | 4.00 | சிமெண்ட் சாலை |
| 25 | 16 | முத்துரெட்டியார் –4வது தெரு | Street | 90.00 | 4.20 | மண்சாலை |
| 26 | 17 | புது நகர் பள்ளி பின்புறம் சாலை | Street | 50.00 | 6.00 | மண்சாலை |
| 27 | 18 | கூட்டுறவு பிரதான சாலை | Lane | 95.00 | 3.20 | மண்சாலை |
| 28 | | கங்கை மருத்துவமனை 2வது தெரு | Street | 250.00 | 4.00 | மண்சாலை |
| 29 | 19 | எம்.ஜி.ஆர் நகர் 8வது சந்து | Lane | 150.00 | 3.20 | மண்சாலை |
| 30 | 20 | செல்லியம்மன் கோயில் 2வது சந்து | Lane | 60.00 | 3.20 | மண்சாலை |
| 31 | | ஆர் கே மூர்த்தி நகர் விரிவாக்கம் | Street | 170.00 | 5.00 | மண்சாலை |
| 32 | | ஆர் கே மூர்த்தி நகர் விரிவாக்கம் | Road | 350.00 | 5.00 | மண்சாலை |
| 33 | | EB அலுவலகம் 4வது சாலை | Lane | 200.00 | 3.20 | மண்சாலை |
| 34 | 21 | தபால் அலுவலக தெரு | Lane | 150.00 | 3.20 | மண்சாலை |
| 35 | | கபூர்பாய் லேன் | Lane | 150.00 | 3.20 | மண்சாலை |
| 36 | 22 | தர்மசாலை சாலை 1வது சாலை | Lane | 250.00 | 5.00 | தார் சாலை |
| 37 | 26 | RC நேதாஜி சாலை –2வது சந்து | Lane | 120.00 | 3.20 | சிமெண்ட் சாலை |
| 38 | | RC நேதாஜி சாலை –2வது சந்து | Street | 200.00 | 5.00 | சிமெண்ட் சாலை |
| 39 | 27 | ஆறுமுகம் 2வது சாலை | Road | 160.00 | 6.00 | மண்சாலை |
| **அலுவலக குறிப்பு:** | 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2.திட்டநிதியின் கீழ் முழுமான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | | | | | |

**ந.க.எண்.422/2025/இ1**

**பொருள் எண்: 19**

வடலூர் நகராட்சி, I&A திட்ட நிதியின் கீழ் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையம் முடிவுறும் தருவாயில் உள்ளது. கும்பகோணம் – சென்னை பிரதான சாலையில் அமைந்துள்ள கடைகளுக்கு முன்புறம் மற்றும் பேருந்து நிலைய வாளகத்தில் மழைநீர் செல்ல ஏதுவாக தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான, செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2024–2025ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.421/2025/இ1)**

**பொருள் எண்: 20**

வடலூர் நகராட்சி அலுவலகத்தில் தினசரி வசூல் மையத்தில் வசூல் செய்யப்பட்டு வரும் சொத்துவரி இனங்கள், குடிநீர் கட்டணங்கள் மற்றும் இதர இனங்களுக்கான தொகையினை அடுத்த நாள் வங்கியில் செலுத்தும் பணத்தை வைப்பதற்கு கருவூலக பெட்டி (Locker Box) கொள்முதல் செய்யும் பணி மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் இதர வருவாய் ஈட்டக்கூடிய இனங்களுக்கு பொதுமக்களிடமிருந்து வரிவசூல் செய்ய 15, 7, மற்றும் 3 நாட்கள் கேட்பு அறிவிப்பு எடுக்க வேண்டியுள்ளது. எனவே, Printer with xerox Machine கொள்முதல் செய்யும் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.2.70 இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.350/2025இ1.**

**பொருள் எண்: 21**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வள்ளலார் தெய்வ நிலைய வளாகத்தில் தற்காலிக கழிவறைகள் அமைத்தல், குடிநீர் வசதிகள் ஏற்படுத்துதல், மருத்துவ முகாமிற்கு சாமியனா பந்தல், சேர் அமைத்தல் மற்றும் மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.462,நாள்.30.12.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 05.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (–) 0.28 % குறைவு |
| 2 | T.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், | (+) 0.26 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.28 % குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.28/2025/இ1)**

**பொருள் எண்: 22**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 01 முதல் 27 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கு பெயர் பலகை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.645, நாள்.29.11.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 05.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | TEC LED , ஒப்பந்ததாரர், சென்னை | (–)0.05 % குறைவு |
| 2 | Sree Infra , ஒப்பந்ததாரர், சென்னை | (+) 0.10 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.05% குறைவாக கொடுத்துள்ள TEC LED, ஒப்பந்ததாரர், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.28/2025/இ1)**

**பொருள் எண்: 23**

இந்நகராட்சியில் நகர் மன்றத்தலைவர் ஈப்பு வாகன எண் TN 31 CE8496. ஆணையாளர் ஈப்பு வாகன எண் TN 31 CE8476 மற்றும் நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண் TN 31 CE8412 ஆகியவற்றிற்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்துதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.30/- இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.490, நாள்.03.02.2025அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 05.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (−) 0.24 % குறைவு |
| 2 | T.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், ஆணையம்பேட்டை | (+) 1.18 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) % குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.72/2025/இ1)**

**பொருள் எண்: 24**

இந்நகராட்சிகுகுட்பட்ட வார்டு எண்.27, ஆர்.சி தெற்கு தெரு , 3வது சிமெண்ட் கான்கீரிட் சாலை மறுசீரமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.00/- இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.478,நாள்.03.02.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 05.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (−)0.04 % குறைவு |
| 2 | T.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், | (+) 0.76 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.04% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.74/2025/இ1)**

**பொருள் எண்: 25**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 , ஆபத்தாரணபுரம் பேருந்து நிறுத்தம் முதல் வார்டு எண்.02, வடக்கு தெரு மாரியம்மன் கோயில் வரையில் உள்ள சேதமடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய் (90 MM Dia PVC Pipe) மாற்றும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00/- இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.483, நாள்.03.02.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 05.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (−) 0.69 % குறைவு |
| 2 | T.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், ஆணையம்பேட்டை | (+) 2.44 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.69% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.70/2025/இ1)**

**பொருள் எண்: 26**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26, ஆர்.சி நேதாஜி சாலை 3வது ரோடு மற்றும் ஆர்.சி. அந்தோணியார் சாலை 8வது ரோடு பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலையை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.50/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.480, நாள்.03.02.2025அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 05.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (−) 0.05 % குறைவு |
| 2 | T.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், | (+) 0.83 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.05% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.71/2025/இ1)**

**பொருள் எண்: 27**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, எம்.ஜீ.ஆர் நகர் 6வது ரோடு சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.00/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.484, நாள்.03.02.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 05.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் | (−) 0.06 % குறைவு |
| 2 | T.ராஜேந்திரன், ஒப்பந்ததாரர், | (+) 0.79 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.06% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.73/2025/இ1)**

**பொருள் எண், 28**

தமிழ்நாடு அரசின் 2025 – 26ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை பொதுமக்கள் அறிந்துக்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 100 இடங்களிலும், ஏனைய 24 மாநகராட்சிகளில் 48 பகுதிகளிலும், 137 நகராட்சிகளில் 274 இடங்களிலும், 14.03.2025 வெள்ளி கிழமை அன்று காலை 9.30 மணி முதல் ஒளிபரப்பப்படுகிறது. மேலும், 15.03.2025 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணி முதல் வேளாண் நிதிநிலை அறிக்கையும் பொதுமக்கள் அறிந்துக்கொள்ளும் வகையில் எல்.இ.டி திரையின் வாயிலாக நேரடி ஒளிப்பரப்பு செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தலின் பேரில் வடலூர் நகராட்சி வள்ளலார் பேருந்து நிலையம் எதிர்புறம் மக்கள் காணும் வண்ணம் ஏற்பாடு செய்து ஒளிபரப்பு செய்ய தேராய செலவினம் ரூ.1.00 இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.431/2025/இ1)**

**பொருள் எண், 29**

வடலூர் நகராட்சி பகுதிகளில், உள்ள தெரு நாய்களை கருத்தடை மூலமாக கட்டுபடுத்தும் விதமாக அரசு ஆணைஎண்:GO(4D) No: 01 நாள் 17.03.2023 மற்றும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் எண் 20383/2022/எச்1 நாள் 09.12.2022 தெரிவிக்கப்பட்டுள்ளது அதன் படி வடலூர் நகராட்சியின் பகுதியில் DBC மற்றும் Animators, Field Assisstant மூலமாக தெருநாய்கள் 623எண்ணிக்கையை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே Animal Husbandry and Veterinary service. சென்னை அவர்களின் கடிதத்தில் கடலூர் மாவட்டத்தில் உள்ள MS International Trust of Peace, ChennaiNGO மூலமாக தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு,அதனை கருத்தடை அறுவை சிகிச்கை முடிந்த பின் உணவு கொடுத்து தங்க வைத்து(மூன்று நாட்களுக்கு) பின் தெருநாய் பிடிக்கப்பட்ட இடத்தில் விடப்பட வேண்டும் அதற்க்கு அரசு நிர்ணயம் செய்த கட்டணம் ரூ.1450/+200/ மொத்தம் ரூ 1650/ தொகையை செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் /2025/எச்1**

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்

**நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி**

**வடலூர் நகராட்சி**

**மன்றக் கூட்ட அழைப்பிதழ்**

**************

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 17.03.2025. திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,

வடலூர் நகராட்சி.

2025 ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி

பொருள் எண்: 22

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 01 முதல் 27 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கு பெயர் பலகை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80/- இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.645, நாள்.29.11.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 05.02.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | TEC LED , ஒப்பந்ததாரர், சென்னை | (−)0.05 % குறைவு |
| 2 | Sree Infra , ஒப்பந்ததாரர், சென்னை | (+) 0.10 % அதிகம் |

அலுவலகக்குறிப்பு :- மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.05% குறைவாக கொடுத்துள்ள TEC LED, ஒப்பந்ததாரர், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண்.28/2025/இ1)

தீர்மானம் எண் . ,நாள்.17.03.2025. அனுமதிக்கப்பட்டது.

(ஓம்) திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்றதலைவர்,
வடலூர் நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்
வடலூர் நகராட்சி

**2025 ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை: திரு. சு. சிவக்குமார்,**
**நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி**

**பொருள் எண்: 29**

வடலூர் நகராட்சி பகுதிகளில், உள்ள தெரு நாய்களை கருத்தடை மூலமாக கட்டுபடுத்தும் விதமாக அரசு ஆணைஎண்:GO(4D) No: 01 நாள் 17.03.2023 மற்றும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் எண் 20383/2022/எச்1 நாள் 09.12.2022 தெரிவிக்கப்பட்டுள்ளது அதன் படி வடலூர் நகராட்சியின் பகுதியில் DBC மற்றும் Animators, Field Assisstant மூலமாக தெருநாய்கள் 623எண்ணிக்கையை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே Animal Husbandry and Veterinary service. சென்னை அவர்களின் கடிதத்தில் கடலூர் மாவட்டத்தில் உள்ள MS International Trust of Peace, ChennaiNGO மூலமாக தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு,அதனை கருத்தடை அறுவை சிகிச்சை முடிந்த பின் உணவு கொடுத்து தங்க வைத்து(மூன்று நாட்களுக்கு) பின் தெருநாய் பிடிக்கப்பட்ட இடத்தில் விடப்பட வேண்டும் அதற்க்கு அரசு நிர்ணயம் செய்த கட்டணம் ரூ.1450/+200/ மொத்தம் ரூ 1650/– தொகையை செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.535, நாள்.17.03.2025. அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) திரு. சு. சிவக்குமார்,**
**நகர்மன்றதலைவர்,**
**வடலூர் நகராட்சி.**

//உண்மை நகல்//

**ஆணையாளர்**
**வடலூர் நகராட்சி**